**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.2/2023**

**2026 ஆம்** வருடம் ஜனவரி மாதம் 05 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாச்சிமுத்து | ஜாதி | : | |
| த.பெ | : | முத்துக்கவுண்டர் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | அக்கரைப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 80/2026 |
| தேதி | : | 05.01.2026 | | | |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. 09.03.2021 தேதியிட்ட வாதியிடம் பிரதிவாதிகள் கடனாக தொகை ரூ.35,000/- பெற்றுக்கொண்டு எழுதிக்கொடுத்த புரோநோட்டு(வரவு எதுவும் இல்லை) அசல் **(வா.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 14.12.2022 தேதியிட்ட வாதி அவரது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு(அலுவலக நகல்) மற்றும் அஞ்சலக ரசீது (அசல்) **(வா.சா.ஆ.2/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 15.12.2022 தேதியிட்ட மேற்படி அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் **(வா.சா.ஆ.3/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக இவ்வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor